வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 106/2018 |
| வழக்கு சாட்சி | : | PW 11 |
| நாள் | : | 11.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கே.வி.பாலாஜி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | கே.வரதராஜலு | தொழில் | : | Inspector |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1, 2 எதிரிகள் அஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் மாவட்டம், நெய்வேலி காவல் கோட்டம், ஊமங்களம், காவல்நிலையத்தில் ஆய்வாளரக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2016 - 2017 அன்று திருத்தணி காவல்நிலைய பொருப்பாய்வாளராக பணிபுரிந்தபோது திருத்தணி காவல்நிலைய குற்ற எண் 640/2016 இதச பிரிவு 120(பி), 341, 302, 307, 285, 114, 109 பிரிவின் கீழ் உ/இ 4 TNP Act வழக்கில் எனக்கு முன்பாக இருந்த காவல் ஆய்வாளர் அவர்கள் சாட்சிகளை விசாரணை செய்து அவா் மருத்துவிடுப்பில் சென்றதனால் பொருப்பு ஆய்வாளராக நான் இவ்வழக்கின் கோப்பினை பெற்று சாட்சிகள் மஞ்சுளாதேவி, சிவபிரியா, சிவநேசன், விசாலாட்சி, தலைமை காவலர் திரு.தேவன் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், திருமதி. வித்யா சீனிவாசன், டாக்டர், கே.நளினா, ஆகியோரையும் விசாரணை செய்து தினத்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன் அவா் வழங்கிய சான்றுகள் முறையே **அத.சா.ஆ 55 முதல் அதசாஆ 59**

**ஆகும்.** மேலும், இவ்வழக்கில் வெடிபொருள்கள் மற்றும் Disposal Squad காவல் ஆய்வாளர் திரு.ஜெயராமன் அவர்கள், கூடுதல் தலைமை காவல்துறை இயக்கநர் (operation) அவர்கள் வழங்கிய அறிக்கையினை பெற்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அவர் அனுப்பி வைத்த அறிக்கை **அதசாஆ 60 ஆகும்.** அவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி பூவரசன்க்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை அளித்து காயசான்று வழங்கிய டாக்டர். நவீன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் அவர் வழங்கிய காயசான்று **அதசாஆ 61 ஆகும்.** அதன் பிறகு சட்டகருத்துறை பெற வேண்டி குற்றத்துறை துணை இயக்குநர் காஞ்சிபுரம் அவர்களிடம் கருத்துறை பெற்று அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து விசாரணை அனைத்தும் முடித்து இறுதியாக குற்றப்பத்திரிக்கை 17.03.2017 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை நீங்கள் விசாரணை செய்தீர்களா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு சென்றீர்களா என்றால் இல்லை. சம்பவம் இடம் பற்றிய வரைபடத்தில் அருகில் உள்ள தனி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்யபடவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் நீங்கள் விசாரித்த சாட்சிகள் இந்த வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமுலங்கள் இவைகள் அனைத்தும் சரியான வகையில் விசாரித்து தாக்கல் செய்யப்பட்டது அல்ல அவசரகதியில் சரியாக விசாரிக்காமல் எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்துபோன நபர் அந்த காலகட்டத்தில் ஆளுங்கட்சியை (அஇஅதிமுக) சேர்ந்த கவுன்சிலர் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் முதல் எதிரி திராவிட முன்னேற்றம் கழகம் கட்சியை சார்ந்தவர் என்று சொன்னால் சரிதான். அப்போது அளுங்கட்சியினுடைய அழுத்தத்தின் காரணமாக 1ம் எதிரியும் மற்றவர்களும் எதிரி கட்சியை சார்ந்தவர்கள் என்பதால் உங்களுக்கு தெரிந்த காரணத்திற்காகவும் மேல் அதிகாரியின் நிர்பந்தததின் காரணமாகவும் எதிரிகள்

மீது பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தும் அதை சார்ந்த சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.03.11 14:59:33 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.